பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
23 06 2025 6 45
திங்கட்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. சர்வதேச யோக தின கொண்டாட்டங்கள் மிகுந்த உற்சாகத்துடன் நடைபெற்றிருப்பது மகிழ்ச்சியளிப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. அடுத்த ஆண்டு மார்ச் மாதத்திற்குள் இந்தியா நக்சலைட் பாதிப்பு இல்லாத நாடாக உருவெடுக்கும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

3. இந்தியா மீது தாக்குதல் நடத்தினால் உரிய பதிலடி கொடுக்கப்படும் என்பது ஆபரேஷன் சிந்தூர் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருப்பதாக ஆளுநர் திரு. ஆர்.என். ரவி தெரிவித்துள்ளார்.

4. சென்னை கிண்டியில் குழந்தைகளுக்கான உயர் பன்னோக்கு மருத்துவமனை அமைக்கப்பட உள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

5. உலகக்கோப்பை பாரா வலுதூக்கும் சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், ஒரு வெள்ளி, 2 வெண்கலப் பதக்கங்களை வென்றது.

<u>*--- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<>>>>

சர்வதேச யோக தின கொண்டாட்டங்கள் மிகுந்த உற்சாகத்துடன் நடைபெற்றிருப்பது மகிழ்ச்சியளிப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனைப் பதிவிட்டுள்ள பிரதமர், இந்தியாவிலும், உலகின் பிற பகுதிகளிலும் 11வது சர்வதேச யோகா தினம் கொண்டாடப்பட்டதை சுட்டிக்காட்டியுள்ளார்.

<<<<>>>>

அடுத்த ஆண்டு மார்ச் மாதத்திற்குள் இந்தியா நக்சலைட் பாதிப்பு இல்லாத நாடாக உருவெடுக்கும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

சத்தீஸ்கட் மாநிலம் ராய்ப்பூரில் நக்சலைட் பிரச்சினையால் பாதிக்கப்பட்ட மாநிலங்களின் காவல்துறை தலைவர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் பேசிய அவர், மத்திய-மாநில அரசுகளின் சரணடையும் கொள்கைகளைப் பயன்படுத்தி, நக்சலைட்டுகள் வன்முறையைக் கைவிட்டு தேசிய நீரோட்டத்தில் இணைய வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

ஆயுதங்களை ஒப்படைத்து சரணடையும் நக்சலைட்டுகளின் மறுவாழ்வுக்கு தேவையான அனைத்து உதவிகளும் வழங்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நக்சலைட்டுகளுக்கு எதிரான நடவடிக்கை மழைக்காலத்திலும் தொடரும் என்றும் திரு. அமித் ஷா தெரிவித்தார்.

இதனிடையே திரு. அமித் ஷா வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், நக்சலைட்டுகளுக்கு எதிரான நடவடிக்கையில் மத்திய

அரசு, மாநில அரசுகளுடன் ஒருங்கிணைந்து செயல்படும் என்று குறிப்பிடடுள்ளார்.

முன்பு நக்சலைட் பாதிப்புக்கு ஆளான பிஜப்பூர் சுற்று வட்டாரப் பகுதிகளில் தற்போது வளர்ச்சிப் பணிகள் அதிகளவில் மேற்கொள்ளப்படுவதையும் திரு. அமித் ஷா சுட்டிக்காட்டியுள்ளார்.

<<<<>>>>

பாகிஸ்தானுக்கு எதிரான ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை இந்திய ராணுவ வரலாற்றில் ஒரு குறிப்பிடத்தக்க தருணம் என ஆளுநர் திரு. ஆர்.என். ரவி தெரிவித்துள்ளார்.

சென்னையில் உள்ள ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் முப்படை வீரர்கள் மற்றும் ராணுவ தளவாட உற்பத்தி நிறுவனங்களின் நிர்வாகிகளை அவர் கௌரவித்தார்.

நிகழ்ச்சியில் பேசிய ஆளுநர், பிரதமர் திரு. நரேந்திர மோடியின் துணிச்சலான தலைமை காரணமாக நாட்டின் பயங்கரவாத எதிர்ப்பு நிலைப்பாட்டில் தெளிவான மாற்றம் ஏற்பட்டுள்ளதாக கூறினார்.

இதன் மூலம் இந்தியா மீதான பயங்கரவாத தாக்குதலுக்கு உறுதியான பதிலடி கொடுக்கப்படும் என்பது உறுதிப்படுத்தப்பட்டிருப்பதாகவும் ஆளுநர் குறிப்பிட்டார்.

இத்தகைய நிலைப்பாடு ஆயுதப் படைகளின் நம்பிக்கை, மன உறுதி மற்றும் ஆயத்த நிலையை மேம்படுத்தி இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

தேச பாதுகாப்பில் தமிழகம் முன்னோடியாக உள்ளது என்று கூறிய ஆளுநர், சுதந்திரப் போராட்ட காலம் முதல் தமிழகத்தைச் சேர்ந்த ஏராளமானோர் ஆயுதப் படைகளில் பணியாற்றி வருவதையும் நினைவுகூர்ந்தார்.

<<<<>>>>

7 கண்டங்களில் உள்ள 7 உயரமான மலைகளில் ஏறி சாதனை படைத்த தமிழகத்தைச் சேர்ந்த முத்தமிழ்ச் செல்விக்கு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், உயிரைப் பணயம் வைத்து இந்த சாதனையை சாத்தியமாக்கி இருக்கும் முத்தமிழ்ச் செல்விக்கு பாராட்டுகளை தெரிவித்துக்கொள்வதாக குறிப்பிட்டுள்ளார்.

அவரது முயற்சிகளுக்கு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் துணை நிற்கும் என்றும் திரு. உதயநிதி ஸ்டாலின் கூறியுள்ளார்.

<<<<>>>>

சென்னை கிண்டி கிங் இன்ஸ்டிடியூட் வளாகத்தில் 487 கோடி ரூபாய் மதிப்பீட்டில் குழந்தைகளுக்கென்று பிரத்யேக உயர் பன்னோக்கு மருத்துவமனை அமைக்கப்பட உள்ளதாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

இதற்கான இடம் தேர்வு மற்றும் கட்டுமானப் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்ட பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த மருத்துவமனை உலக தரத்தில் அமைக்கப்படும் என்றார்.

7 தளங்களுடன் அமையும் இந்த மருத்துவமனைக்கு விரைவில் ஒப்பந்தப்புள்ளி கோரப்படும் என்றும், 2 ஆண்டுகளுக்குள் கட்டுமானப் பணிகளை முடிக்க திட்டமிட்டிருப்பதாகவும் திரு. மா. சுப்பிரமணியன் தெரிவித்தார்.

<<<<>>>>

மதுரையில் நடைபெற்ற முருக பக்தர்கள் மாநாட்டில் ஆபரேஷன் சிந்தூர் வெற்றிக்கு காரணமான இந்தியா ராணுவத்திற்கும், பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கும் நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்த மாநாட்டில் பேசிய ஆந்திர துணை முதலமைச்சர் திரு. பவன் கல்யாண், தமிழகத்தில் உள்ள அரசியல் தலைவர்கள் கருத்து சுதந்திரத்தை தவறாகப் பயன்படுத்தி இந்து மதத்தை விமர்சிப்பதை தவிர்க்க வேண்டும் என்றார்.

இந்துக்களை மதவாதிகள் என்று சித்தரிக்கும் போலி மதச்சார்பின்மையை கைவிட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் பேசுகையில், தமிழ்க் கலாச்சாரத்தை பேணிக் காப்பதற்காகவே இந்த மாநாடு நடத்தப்படுவதாக கூறினார்.

தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாள மொழி பேசும் மக்கள் அனைவரும் ஒரே கலாச்சாரத்தைப் பின்பற்றுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அஇஅதிமுகவைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர்கள் திரு. ஆர்.பி. உதயகுமார், திரு. செல்லூர் ராஜு, திரு. ராஜேந்திர பாலாஜி உள்ளிட்டோரும் இந்த மாநாட்டில் கலந்துகொண்டனர்.

<<<<>>>>

நீலகிரி, கோவை, திருப்பூர், தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் இன்று இடியுடன் கூடிய மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

தென்காசி, திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் லேசானது முதல் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் நேற்று பரவலாக மழை பெய்துள்ளது.

உளுந்தூர்பேட்டை மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் பெய்த இந்த மழை காரணமாக வெப்பம் தணிந்து குளிர்ச்சியான சூழல் நிலவுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

மியான்மரில் நிலநடுக்கம் உணரப்பட்டது. இது ரிக்டர் அளவில் நான்கு புள்ளி ஒன்றாக பதிவானது.

-----------

ஈரானில் இருந்து 285 இந்தியர்கள் பாதுகாப்பாக தாயகம் அழைத்து வரப்பட்டதாக வெளியுறவுத்துறை இணையமைச்சர் திரு. பபித்ரா மார்கரிட்டா தெரிவித்துள்ளார்.

-----------

மும்பை விமான நிலையத்தில் சுங்கத் துறையினர் நடத்திய சோதனையில் சுமார் 4 கோடியே 24 லட்சம் ரூபாய் மதிப்புள்ள தங்கம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

-----------

பஞ்சாபின் மோகா பகுதியில் போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்ட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

-----------

கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டையில் வட்டார வளர்ச்சி அலுவலக கட்டுமானப் பணிகளை பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு தொடங்கி வைத்தார்.

-----------

மத்திய அரசின் தேசிய பார்வை இழப்பு தடுப்பு திட்டத்தின்கீழ் கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினத்தில் நடைபெற்ற இலவச கண் சிகிச்சை முகாமில் ஏராளமானோர் பங்கேற்று சிகிச்சை பெற்றனர்.

-----------

காஞ்சிபுரம் மாவட்டத்தில் 70 சதவீத மானியத்துடன் சூரிய சக்தி பம்புசெட் அமைக்கும் திட்டத்தில் பயனடைய விரும்பும் விவசாயிகள், வேளாண் பொறியியல் துறையை அணுகுமாறு ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் கேட்டுக்கொண்டுள்ளார்.

-----------

ஹஜ் புனிதப் பயணம் முடித்து சென்னை திரும்பிய தமிழகத்தைச் சேர்ந்த பயணிகளை மாநில சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திரு. சா.மு. நாசர் வரவேற்றார்.

-----------

சென்னை துறைமுகம் தொகுதிக்குட்பட்ட காமராஜர் நகர் திட்டப் பகுதியில் தமிழக நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் புதிய குடியிருப்புகள் கட்டும் பணியை மாநில அமைச்சர் திரு. சேகர் பாபு ஆய்வு செய்தார்.

-----------

தமிழகத்தில் உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்படும் பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி சென்னை மெரினா கடற்கரையில் நடைபெற்றது.

-----------

சென்னை கிண்டியில் உள்ள அரசினர் மகளிர் தொழிற்பயிற்சி நிலையத்தில் சேர விரும்பும் பெண்கள், தொழிற்பயிற்சி நிலையத்திற்கு நேரில் சென்று சேர்ந்துகொள்ளலாம் என ஆட்சியர் திரு. ரஷ்மி சித்தார்த் ஜகடே கேட்டுக்கொண்டுள்ளார்.

-----------

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

உலகக்கோப்பை பாரா வலுதூக்கும் சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், ஒரு வெள்ளி, 2 வெண்கலப் பதக்கங்களை வென்றது.

ஆடவர் பிரிவுகளில் **Joby Mathew** ஒரு தங்கம் மற்றும் ஒரு வெள்ளிப் பதக்கத்தை வென்றார்.

**Gulfam Ahmed** ஆடவர் 59 கிலோ எடைப்பிரிவிலும், **Ramubhai Bambhava** 72 கிலோ எடைப்பிரிவிலும் வெண்கலப் பதக்கத்தை வென்றனர்.

------------

ப்ரோ ஹாக்கி லீக் போட்டியில் இந்தியா 4-3 என்ற கோல் கணக்கில் பெல்ஜியத்தை வென்றது.

**<<<<>>>>**